ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

பூகோளத்தில் பூமியைச்சுற்றிலும் சராசரப்பிராணிகளிருப்பதுபோல சந்திரமண்டலம் முதலியவிடங்களிலும் தேவாதிகள் வஸித்துக்கொண்டிருப்பதாக நமது சாஸ்திரகாரர்கள் பிரத்தியக்ஷம், அனுமானம், சாஸ்திரம் முதலிய பிரமாணங்களால் நிரூபித்திருக்கிறார்கள். பூலோகத்தில் நம் பரதபூமியில் செய்யப்படும் சாஸ்திரீய கர்மயோகத்தின் பயனை அனுபவிக்கப் பிதிருயாணமார்க்கமெனப்படும் தூமாதி மார்க்கத்தால் ஆதிவாஹிகதேவர்களால் வஹிக்கப்பட்டு ஸ்வர்க்கம்செல்லுபவர்களே தேவர்களெனப்படுவார்கள். அவர்களுக்கு இங்கு யாகாதி கர்மங்களில் கொடுக்கப்படும் ஹவிர்பாகமே அமிர்தரூபமாகப் பரிணமித்து ஆஹாரமாகின்றது. இங்கிருந்து ஹவிர்பாகம் போகாவிடில் தேவர்களுக்கு ஆஹாரமில்லை. அதனாற்றான்— "அசுராதிகளின் அக்கிரமச் செய்கைகளால் கர்மபூமியில் கர்மயோகம்நடைபெறாதபோனால் தேவதைகள் கவலையுடன் கூட்டம்போட்டு பகவானைப்போற்றிச்சரணமடைந்து, கர்மபூமியில் நேர்ந்த கர்மத்தடையால் தங்களுக்கு ஸம்பவித்த ஆபத்தை விலக்கப்பிரார்த்திப்பதும், அவர்களிடம் கருணைகூர்ந்து அவர்களது பிரார்த்தனைப்படி பகவானும் அதர்மருசியுள்ள அஸுரர்களை அடியோடழித்து, கர்மயோகிகளைக் கைதூக்கிவிட்டு தர்மத்தை ஸ்தாபித்து தேவர்களது ஆபத்தை விலக்கிவைப்பார்" என்பதாதி பல இதிஹாஸங்களைப் பாரதாதிகள் படித்த பண்டிதர்கள் உபதேசிக்கின்றனர். அந்த தேவர்கள் இப்பொழுது போய்விடவில்லை. அவர்களின் பசி சீர்திருத்தக்காரர் சொல்லுமுபாயத்தால் தீரப்போவதில்லை. ஆகவே தற்காலத்தில் திருத்தக்காரர்களது துர்போதனையைக் கேட்டுத் திரியும் கலியுக அஸுரர்களால் கர்மயோகத்தடை நம்பாரதபூமியில்நேர்ந்திருப்பதை நம்மதப் பெரியார் பகவானுக்கு நினைவூட்டினாலும் மூட்டாவிட்டாலும் இந்தக்கொடிய கெடுதலை தேவர்கள் நினைவூட்டாமல் இருக்கப்போவதில்லை. அதனால் இந்த விஷயம் பகவானுடைய காதிலும் விழாமலிருக்கப்போகிறதில்லை. காதில் விழுந்த கெடுதலைக்கண்டிக்கக்கண்ணன் கிளம்பாமலிருக்கப்போவதில்லை. திருத்தக்காரர்களது துஷ்டத்தீர்மானத்தைத் திருத்தாமலிருக்கப்போவதில்லை. இந்த ஆபத்துத்தீர்ந்து தார்மிகர்கள் தைர்யமாயில்லாமலிருக்கப்போவதுமில்லை என்ற தீர்மானத்தைத் திடமாக வைத்துக்கொண்டுதான் தார்மிகர்கள் தர்மத்தடைச்சட்டம் அமுலுக்கு வரப்போவதை அலக்ஷியம் செய்தாப்போலிருக்கிறார்கள். அதைப் பின்பற்றி மற்றவர்களும் தர்மசிரத்தையை விடாமல் சிரேயஸ்ஸை அடைவார்களாக.

சுபம்.

பத்திராதிபர்.

௨

# ஆர்ய தர்மம்.

சுக்ல-ஹு பங்குனி-மீ ௨௧௨

## நாகரீகமென்றால் என்ன?

பழைய கர்நாடகமிதுவென்று கண்டிக்கப்படும் பண்டைய காலத்துப் பழக்கவழக்கங்களிலும் ஓர் நாகரீகமென்பதுண்டு. தற்காலத்திலுமோர் நாகரீகம் கொண்டாடப்படுகிறது. இந்த நாகரீகமும் பழைய நாகரீகமும் ஒருமாதிரியாயில்லை. இவ்விரண்டுமொரேவிதமாயிருக்குமாயின் இவ்விரண்டையும் கொண்டாடுபவர் ஒருவரையொருவர் இகழ்ச்சியாய்ப் பேசமாட்டார்கள். அதனுலிரண்டுவேறுபட்டதாயிருக்கவேண்டுமென்று ஊஹிக்கப்படுவது போலவே பிரத்தியக்ஷத்திலும் அனுபவிக்கப்படுகிறது. இவ்விரண்டினுள் ஒன்றுதான் ஸரியான நாகரீகமாயிருக்கவேண்டும். இரண்டும் ஸரியானதாக இருக்கமுடியாது. ஒன்றற்கொன்று விரோதப்படும்படியாயுள்ளவைகளுள் இரண்டும் ஸரியாக இருக்குமென்பது நியாயத்திற்கொத்ததில்லை. பெரியோரைப் பின்பற்றுதல், வேதமோதல், யாகம்செய்தல் முதலியவற்றை புதுநாகரீகக்காரர் தூஷிக்கின்றனர். பெரியோரைப் பழித்தல், வேதத்தை விடுதல், யாகத்தைத் தடுத்தல், குடுமியைக் கத்தரித்தல் முதலிய புதுநாகரீகக் காரியங்களை பழைய நாகரீகக்காரர் பழிக்கின்றனர். ஆகவே நாகரீகமென்றால் எது ஸரியான நாகரீகமென்று விமர்சனம் செய்தால் ஸர்வலோகத்திலும் நன்மையைப் பயக்கும் நாகரீகமே ஸரியான நாகரீகம். புதுநாகரீகம் இஹத்தில் ஏதோ சில திருஷ்டமான பயனையளிப்பதாகச் சிலருக்குப் பிராந்தியிருந்தபோதிலும் போட்டிக்காகப் பொதுக்கூட்டத்தில் பிரசாரம் செய்யவேண்டுமென்று தோன்றியிருந்தபோதிலும் பிராமாணிகர் அது எல்லோராலும் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்படவில்லை. புதுநாகரீகத்தால் வைதிகமான விவாஹோபநயனாதி ஒவ்வொரு சுபகாரியங்களிலும் ஒருவரைப்பார்த்து மற்றொருவர், அவரைப்பார்த்து வேறொருவராக தனக்குத்தானாகவே இழுத்துவிட்டுக்கொண்ட லௌகிகநாகரீகமென்ற நிர்ப்பந்தத்திலகப்பட்டு கஷ்டப்படு

கண்ணியமாயிருந்த குடும்பங்கள் கணக்கிலடங்கா. இந்த நாக
ரீகப்பிரவாஹம் ஸாமான்ய ஏழைக்குடும்பங்களிலும் புகுந்து
ஜனங்களை மூச்சுவிடக்கூட இடங்கொடுக்கவில்லை. இந்த நிர்ப்
பந்தத்தைத் தொலைக்க புதுநாகரீகப்பிசாசை விரட்டுவதே நல்ல
உபாயமெனத் தெரிந்திருந்தும் குருட்டுத்தனமான முரட்டுப்
பிடிவாதத்தால் விடத்தெரியாமல் விழிக்கிறார்கள். இந்த இடை
வெளி பார்த்திருந்து திருத்தக்காரர் கிளம்பி இப்படி நேர்ந்த
ஆபத்தெல்லாம் வைதிகக் குருட்டுநம்பிக்கையாலேயல்லாது வே
றல்லவென்று இந்த தோஷத்தை வைதிகாசாரத்தின்மீது ஆரோ
பித்து சாஸ்திரஆராய்ச்சிகுறைந்த ஆர்யச்சிறவர்களின் மனதைக்
கலைத்து வெகு சுலபமாய் புதுநாகரீகத்தை நிலைநாட்டிவருகிறார்
கள். இந்த கோலாஹலத்தில் பழைய நாகரீகம் தலைகிளப்ப
முடியாமல் ஒளிந்துநிற்கின்றது. வைதிகத்தில் பூர்ணாபிமானம்
வைத்திருப்பவர்கள் கிரஹத்தில் நடக்கும் சுபகாரியங்களில் மேள
காரன், தாளக்காரன், பாட்டுக்காரன், கூத்துக்காரன், செக்கான்,
சேணியன், தட்டான் முதலியவர்களுக்கு முதல்பாக்கு வைத்து
முழுப்பணத்தையும் செலவிட்டுவிட்டு வைதிகாசாரமுள்ள சிஷ்டர்
களைச் சற்றேனும் கவனிக்காமலிருக்கும்பொழுது பழைய நாக
ரீகம் எப்படித் தலைதூக்கமுடியும் என்றாலும் வைதிகர்கள்மட்டும்
தங்கள் உற்சாஹத்தை விடாமல் இவ்வளவு ஆனபிறகாவது ஜனங்
களுக்குத் தோன்றாதாவென்று பழைய நாகரீகத்தையே நினைத்
துக்கொண்டு அதன் தலையைக் கிளப்பப்பார்க்கிறார்கள் கலிமஹா
ராஜனும் அவர்களது கக்ஷியில் நின்றுகொண்டு வைதிகரை விரட்டு
கிறான். ஆயினும் பழைய நாகரீகந்தான் ஸரியான நாகரீகம்.
புதிது பொய்யாகக்கூடியதே என்ற நம்பிக்கையைப் பரமேச்வரன்
வைதிகர்களிடம் குறைக்கவில்லை. ஆகையால் ஸகல ஜனங்களும்
பிராந்தியாய்த் தோன்றிய புதிய பரிஷ்காரத்தை மாற்றி பிராசீன
வழக்கத்திலேயே நிலைத்திருந்து நித்தியமான வேதத்தால் வெளி
யிடப்பட்ட பழைய நாகரீகப்படியே நடந்து, பரலோகபாத்தியத்
தையிழந்துவிடாமல் அதற்கும் பாத்தியஸ்தர்களாகக்கூடிய யோக்ய
தையையடைந்து இஹபர ஸகல சிரேயஸ்ஸையுமடைவார்களாக.

சுபம். பத்திராதிபர்.

# அஹிம்ஸாதர்மத்தின் மேன்மை.

(86-வது பக்கத்தொடர்ச்சி.)

கடைசியாய் இதையும் கூறுகின்றேன். குறள் இயற்றியவர் அவதாரபுருஷன். அவர் வசனத்தைக்கொண்டு யாகத்தை நிந்திக்கத்தோன்றியதில் தமிழ்ச்சங்கம் பிரதான தமிழ்பண்டிதரான ஸ்ரீமான் திருநாராயண அய்யங்காரவர்களே இவர் யாக நிந்தை என்று கூறியபாட்டை யாகப்பிரசஸம்ஸையென்று கூறிவிட்டனரே. இதில் எவரது வார்த்தை பிரமாணமாகும். சாஸ்திரியாரோ ஸப்ஸ்கிருதம் கற்றுத் தமிழைக்கடன் வாங்கியவர். ஸ்ரீமான் அய்யங்காரவர்களோ தமிழில் போற்றத்தக்க பாண்டித்தியமுடையவர். இருக்கட்டும், சாஸ்திரியார் ஸம்ஸ்கிருதமறிந்தவராதலால் இதைக் கூறுகிறேன். இது பிரமாணமில்லையென்பாரோ யாரோ.

கௌதமர்கூறிய 48-ஸம்ஸ்காரங்களில் அக்னியாதேயம் அக்னிஹோத்ரம் தர்சம் பூர்ணமாஸம் ஆக்ரயணம் சாதுர்மாஸ்யங்கள் நிருடபசுபந்தம் ஸௌத்ராமணி அக்னிஷ்டோமம் அத்னித்யயாக்னிஷ்டோமம் உக்தியம்ஷோடசிவாஜபேயம் அதிராத்மம் அப்தோமம் என்றும்

महायज्ञैश्च यज्ञैश्च ब्राह्मीयं क्रियते तनुः ।

என்று பிர்மஞானர்கமான சரீரம் மகாயக்ஞங்களாலும் யக்ஞங்களாலும் ஏற்படுகிறதென்றும் இருக்கிறது. 'अशुद्धमिति चेन्न शब्दात्' என்ற பிர்ம்மஸூத்திரத்தில் வ்யாஸாசார்யார் யாககன்மா அசுத்தமில்லையென்றார். பாஷ்யக்காரரும்,

पशु हिंसादियोगात् अशुद्धमाध्वरिकं कर्म तस्य अनिष्टमपि फलमवकल्पते ।

யாகத்தில் பசுஹிம்ஸை இருப்பதால் யாககர்மா அசுத்தம். அதனால் அனிஷ்டபலனும் உண்டாகும் என்று பூர்வபக்ஷம் ஏற்பட யாககர்மா அசுத்தமல்ல. ஏன்? சப்தத்தினால்

" शास्त्रहेतुत्वाद्धर्माधर्मविज्ञानस्य । अयं धर्मोऽयमधर्म इति शास्त्रमेव विज्ञाने कारणम् । अतीन्द्रियत्वात्तयोः । शास्त्राच्च हिंसाऽनुग्रहादिरूपो ज्योतिष्टोमो धर्म इत्यवधारितः । स कथमशुद्ध इति शक्यते वक्तुं । ननु न हिंस्यात् सर्वाभूतानीति शास्त्रमेव भूत विषयां हिंसां अधर्मइत्यवगमयति । बाढं; उत्सर्गस्तु सः, अपवादोऽग्नीषोमीयं पशुमालभेतेत्यादिः । उत्सर्गापवादयोश्च व्यवस्थित विषयत्वं । तस्मात् विशुद्धं कर्म वैदिकम्॥

தர்மாதர்மம் தெரிந்துகொள்வதற்கு சாஸ்திரமல்லவோ ஹேது. இது தர்மம், இது அதர்மம் என்று அறிவதற்கு சாஸ்திரம்தான் காரணம். அவ்விரண்டும் அதீந்திரியங்கள். சாஸ்திரத்தால் ஹிம்ஸானுக்கிரகரூபமான ஜ்யோதிஷ்டோமம் தர்மமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அது எவ்விதம் அசுத்தமென்று சொல்லமுடியும். ஆனால் ஒரு பிராணியையும் ஹிம்ஸிக்கக் கூடாதென்றிருக்கிறதே. ஏனெனில் ஆம் அது ஸாமான்யம். அபவாதமாய் அக்னீஷோமப்பசுவை ஹிம்ஸிக்கலாமென்றிருக்கிறது. ஸாமான்யம் அபவாதம் இவைகள் வியவஸ்தை செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் வைதிககன்மம் பரமசுத்தமானது என்றும், இன்னும் எவ்வளவோ கோடானுகோடிப் பிரமாணங்களிருக்கின்றன. இப்பிரமாணங்களுக்கும் சாஸ்திரியார் குறள் பிரமாணத்தை வைத்து மாற்றி எழுதினால் நாம் மேல் எழுதுவோமென்று இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன். சுபம்'

M. N. சுப்பிரமணியசாஸ்திரி.

---

## கலிவைபவம்.

நமது நாட்டு ஆரியச்சிறுவர்கள் ஆதிகாலத்தில் அனுஷ்டித்து வந்த அனுஷ்டானங்களனைத்தும் இருந்தவிடங்கூடத்தெரியாமல் அழிந்துவிட்டதே. அவ்விதமழிவதும் அலங்காரமாகக்கருதுபடியாகிவிட்டதே. கலிபுருஷன் பிறந்துஐயாயிரம் வருஷத்துக்குள்ளேயே இவ்விதமிருக்குமானால் இனி எவ்விதமாகுமோ தெரியவில்லையே? ஹே பகவானே? இக்கலிவைபவத்தை ஒழித்து

விடுவதற்கு உமக்கு இன்னமும் அபிப்பிராயமில்லையே. தர்மம் தாழும் போதும் அதர்மம் தலையெடுக்கும்போதும் நான் அவதரிப்பேன் என்று திருவாக்கருளியநீர் தர்மானுஷ்டானம் நாடெங்கும் குறைவின்றி பரவியிருந்து, சிற்சிலவிடங்களில் மாரீசன்,ராவணன் ஹிரண்யகசிபு முதலிய அரக்கர்களால் ஏற்பட்ட கொடுமைகளையும் கூட பொருக்க முடியாமல் கிருதம் முதலிய யுகங்கள்தோறும் அவதரித்திருக்கும்போது, தற்போது அவதாரம் செய்யும் விஷயமாய் ஆலோசனையைக்கூட செய்யாமல் இப்படி உதாஸீனமாக இருப்பது உமக்கு தர்மமா ? ஹே மஹரிஷிகளே உங்களுக்காவது உங்கள் சந்ததியாகிய எங்களிடம் கெட்டுவிட்டார்களே என்று அனுதாபம் கொஞ்சமாவது வேண்டாமா ? தங்களுடைய அபாரசக்தித் திறமையையும், கருணையையும் பஹிரங்கப்படுவதற்கு இதுதான் தகுந்த ஸமயமாகும். உங்களுடையவம்சத் வம்சத்தாரை உபேக்ஷிப்பது உங்களுக்கு உசிதமாகுமா ? உங்களால் உபதேசிக்கப்பட்ட உத்தம உண்மைகளை உள்ளபடி உணராமல் மிருகப்ராயர்களாக இங்குமங்கும் அலைந்து திரிந்து வயிறு வளர்க்கும் ஆரியச் சிறுவர்களுக்கு நற்புத்தியை யார் அனுக்கிஹம் செய்வது ? வேதாத்யயனத்தை வெகுகாலமாக மறந்துவிட்டு ஸ்னானம், ஸந்தியாவந்தனம், ஜபம், பிராணாயாமம், சிகை, குருவுக்குப்பணிவிடை, தண்டம், முதலிய தமது ஆசாரங்களை அடியோடு அழித்துவிட்டு டிராமாக்களில் ஸ்திரீவேஷம்தரித்துக் கொள்வதும், சூதாடுவதும், பாடுவதும், தலைமயிரை தன்னிஷ்டப்படி கத்தரித்துக்கொள்வதும், மற்றும்பல துராசாரங்களை அனுஷ்டிப்பதும் ஆரியச்சிறுவர்களுக்கு ஸஹஜமாய்விட்டது. மற்றும் சிலர் வேதாத்யயனம் செய்வதற்காகவிதிக்கப்பட்டிருக்கும்பிக்ஷா ஜீவனத்தை ஆங்கிலபாஷையை அப்யஸிப்பதற்கு தர்மம்போல்அவலம்பித்துவருகின்றார்கள். அன்றியும் ஆரியர்களுக்கு அனார்யர்களின்பாதசுச்ரூஷையில்அதிகவிசுவாசம் அவ்விதமிருப்பவர்களிடம் அவர்களுக்கு கொஞ்சங்கூட அன்பு கிடையாது. அந்தோ ! பிராமணர்கள் பிராமணரல்லாத பிரபுக்களிடம் ஊழியம் செய்துவருவதும், அவர்கள் பிராமண காரியஸ்தர்களைக்கண்டபடி அவமதித்துப் பேசுவதும், பிராமணர்களுக்கு வெட்கத்தைக்கொடுக்கவில்லையே. இவ்விதம் ஜீவிப்பது பௌருஷமற்றதாகும். பிராமணர்கள் தமதுகௌரவத்தைச்சிறிதும் கவனிக்காமல் இழந்துவிடு

வது பெருங்குற்றமேயல்லவா? பிராமணர்கள் தமது கடமையாக ஏற்பட்டுள்ள வேதசாஸ்திரப் பயிற்சியை வெகுநாளாய் விட்டுவிடவே வேதசாஸ்திரங்களை பிராமணரல்லாதார் கற்பிக்கத் தலைபிட்டுவிட்டார்கள். அவ்விதம் வேதசாஸ்திரங்களை ஆபாஸமாக வறிந்து வித்வனாகத் தன்னை மதித்துக்கொண்டிருக்கும் சூத்திரர்களிடம் பிராமணர்களும் சிலர் சிஷ்யபாவத்தையும் அடைந்திருக்கின்றார்கள். விராட்புருஷனின் முகத்தினின்றும் உத்பன்னர்களாகிய பிராமணர்கள் பாதாளர்களுக்கு சிஷ்யர்களாக இருப்பது மிக மிகவும் கொடுமையே. அன்றியும் ஸாஸ்திரங்களில் சூத்திரர்களுக்கு ஸன்யாஸமென்பது கிடையாது என்று நிஷிதம்செய்திருக்கும்போது சிலர் காஷபம், ருத்ராக்ஷம், விபூதி, முண்டனம், இவைகளை தரித்துக்கொண்டும் மஹரிஷிகளைப் போல் நடனம் டண்ணிக்கொண்டுஇருப்பதே கலிபூர்த்திக்குத் தகுந்த அத்தாக்ஷி. சிலர் இவர்களுக்கு ஸன்யாசாதிகாரமும் சாஸ்திரஸித்தாந்தந்தான் என்றும் சொல்லமுன் வருகிறார்கள்.

இவ்விதம் கலிவைபவத்தால் உத்தமஜாதிகளெனப்போற்றப்படும் பிராமணர்களனைவரும் தமதுகடமைகளைக்கைவிட்டு மிருகப்ராயர்களாக உண்பது, உறங்குவது, மக்கட்பெறுவது முதலிய காரியங்களையே ப்ரதானமாகச்செய்துகொண்டு ஸஞ்சரிப்பதனால் மற்ற ஜாதியர்களும் நிந்திக்க ஆரம்பித்துவிட்டார்கள். அந்தோ! ஒரு பூணூலுள்ளவன் பிரம்மசாரியாகக் கலிமஹிமையால் கருதப்படுகிறான். ஸம்போகத்துக்காக, ஸ்திரீகளை கலியாணம் செய்து கொண்டால் கிருஹஸ்தாசிரமம் ஸித்துவிடுகிறது. பிக்ஷைக்காக காஷயம் பூண்டால் அதுதான் உத்தம ஸன்யாசாச்ரமம். ஆச்ரமங்களின் பெருமையெல்லாம் கலிபுருஷன் அபகரித்துவிட்டானே? இவையெல்லாவற்றையும் எடுத்துக் கூறுவதும் குற்றமாகநினைக்கும்படியும் நேரிட்டதே.

நமது நாட்டுஸ்திரீகளும் புருஷர்களைப்போலவே தமது சாஸ்திரிய கடமைகளை அறவேயொழித்துவிட்டு, மேனாட்டு நாகரீகத்தை ஆதரிக்கத்தலைப்பட்டுவிட்டார்கள். ஆச்சர்யம்! ஆதிகாலத்தில் ஸ்திரீகள் ஸெளபாக்கியம் காந்தி இவைகளின் பொருட்டு முகம்முதலிய அவயங்களில் மஞ்சள் பூசிக்கொள்வது வழக்கம். தற்காலத்தில் மஞ்சளை ஸ்திரீகள் கையாலும்தொடுவதில்லை,

நெற்றியில் குங்குமம் தரித்துக்கொள்வதில்லை. கண்களுக்கு 'மை' இட்டுக்கொள்வதில்லை. மங்கல்யசூத்திரத்தை அணிவதும் அவமதித்து வருகிறார்கள். தாசிகளுக்கும், குலஸ்திரீகளுக்கும், தற்போதுபேதம் கண்டுகொள்ளமுடியாது. அன்றியும்ஸ்திரீகள் ருதுவான பிறகும் கச்சமில்லாமல் வஸ்திரங்கட்டிக்கொண்டு வெளியிலும் ஸஞ்சரித்து வருகின்றார்கள். ருதுவானபிறகாவது புருஷர்களைப்போல் கச்சங் தரித்துக்கொள்வதுதான் சாஸ்திரமன்றோ? விந்தை! கலிமஹிமையால் 11-வது வயதில் ருதுவாவதும் 13-வது வயதில் மக்கட்பெறுவதும், 22-வது வயதில் பேரனையடைவதும்,36-வது வயதில் பேரனுக்குப்புத்திரனைப்பார்ப்பதும் 50-வயதில் மரணத்தையடைவதும் ஸஹகஜமாய்விட்டதே அன்றி 90-வயதிலும் தம்பதிகளாகவே ஒரு குறைவுமின்றி ஜீவித்து வாழ்ந்து வந்த நமது நாட்டில் 7-வது வயதிற்குள்ளேயே கணவனையிழந்து விதவாஸமூஹம் அதிகரித்திருப்பதை கண்ணால் பார்ப்பதற்கு ஸகிக்கவில்லை. ஒருவிதவையாவது இல்லாதவீடு கிடையவேகிடையாது என்று சொல்லலாம். இவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் ஆசாரங்களையும் இவர்களநுஷ்டிப்பதில்லை. பரபுருஷ ஸம்பந்தம் இவர்களிடமும் பரவஆரம்பித்துவிட்டது. ஆபரணம், நல்லவஸ்திரம் இவைகளை அழகாக அணிந்துகொண்டு தீர்த்தாடனம்செய்வதும், உத்ஸவங்களுக்கு உல்லாசமாய்செல்வதும், வீட்டில் கீதை முதலிய நூல்களைப் பாராயணம் செய்வதும், பாணம், ஸாளக்ராமம், முதலியவைகளைப் பூஜிப்பதும் ரகஸ்யமாக பல அக்கிரமங்களை அநுஷ்டிப்பதும் வாயால் வேதாந்தம் பேசுவதும், இவர்களுக்கு அதிகரித்துவிடவே நற்குணமுள்ள ஸ்திரீகளும், இவர்களைப்பார்த்து பலர் கெட்டுவிட்டனர். கலிவைபவத்தால் ஸ்திரீகள் செய்து வரும் கொடுமைச் செயல்களை எடுத்துரைப்பது ஸாத்தியமேயில்லை ஆதலால் அடுத்தவாரத்தில் பாக்கி சம்சயத்தைத் விசாரிக்கத்தொடங்குவாம்.

V. ஜகதீசுவரசாஸ்திரிகள்,
ஸ்ரீமடம் உபன்யாசகர்
கும்பகோணம்.

மாயிருப்பதால்தான் "நானுன்னிடம் கர்ப்பத்தை உண்டுபண்ணினேன்" என்ற மந்திரலிங்க வாயிலாக "என் துடைகளிலேறுவாயாக" என்ற அர்த்தமுள்ள மந்திரத்தைக் கணவன் தான் ஜபிக்க வேண்டுமென்று நிர்ணயமாய்ப் புலப்பட்டாலும், "இம்மந்திரத்தைக் கணவனைத் தவிர மற்றொருவனும் ஜபிக்கக்கடவான்" என்ற ஸ்மார்த்த சுருதியானது மற்றவர்களும் இம்மந்திரத்தை ஜபிக்கலாமென்று மந்திரலிங்கத்தால் புலப்பட்டிருக்கும் அர்த்தத்தை நிராகரித்து ஸித்தாந்தம் செய்துவிட்டது. இவ்விஷயத்தை ஆபஸ்தம்ப கிருஹ்யத்தில் விரிவாய்க்காணலாம். அதனுரை ஆசிரியர்களும் கூட "மந்திரலிங்கங்களைக் காட்டிலும், ஸ்மார்த்த சுருதியானது பிரபலப்பிரமாணமாகையால், "நானுன்னிடம் கர்ப்பத்தை உண்டுபண்ணினேன்" என்ற மந்திரலிங்கத்துக்கு விருத்தமாய் இருந்தாலும் ஸ்மார்த்த சுருதி மூலமாக "மற்றவர்களும் இதை ஜபிக்கலாம்" என்ற அர்த்தத்தை நன்கு விளக்கியிருக்கின்றனர். இவ்வண்ணமே ஒரே மந்திரத்திற்கு மந்திரலிங்கானுஸாரியாக இல்லாத அனேக விஷயங்களில் விநியோகத்தை விதிக்கும் ஸ்மிருதி வசனங்களிலும் அவசியம் அங்கீகரிக்கவேண்டும். ஒரே புருஷஸூக்தத்திற்கு மந்திரலிங்கமூலமாகபுருஷோத்தமாராதனத்தில் விநியோகம் புலப்பட்டாலும் அதற்கு விரோதமாக சிவன், குபோன், வருணன் முதலிய தேவதைகளுடைய ஆராதனத்திலும் அப்புருஷஸூக்தத்திற்கு விநியோகத்தை விதிக்கும் ஸ்மிருதி வசனங்களனேகங் காணப்படுகின்றன. அப்படியே ஆக்நேயயாகத்தில் மந்திரலிங்கவசமாக விநியோகத்தை அடைந்திருக்கும் நவக்கிரஹமந்திரங்களுக்கு புதன், அங்காரகன் முதலிய நவக்கிரஹங்களுடைய ஆராதனத்திலும் விநியோக விதிகள் அனேகம் ஸ்மிருதிகளிலுண்டு. ஆகவே விநியோகங்களெல்லாம் மந்திரலிங்கங்களை அனுஸரித்துக்கொண்டுதானிருக்கும் என்று எப்படிச் சொல்லமுடியும். வைதிககோஷ்டியில் மிகப்பிரஸித்தமாயிருக்குமிந்த விஷயத்தின் ரஹஸ்யத்தை வைதிகஸம்பிரதாயமறியாத மூடர்கள் எவ்விதமறிந்துகொள்வார்கள். இதனுல் சுருதியைக் காட்டிலும், ஸ்மிருதிப் பிரமாணம் மிகவும் துர்பலமென்ற விரோதாதிகரணஸித்தாந்தத்தை சிறிதுமறியாமல், ஸ்மார்த்தவிதியைக் காட்டிலும் மந்திரலிங்கம் பிரபலமென்ற தமது மனோரதத்திற்கு அனுகூலமாக அவ்வதிகரணஸித்தாந்தம் இருப்பதாக நினைத்துக்

கொண்டு மந்திரலிங்கம் ஸ்மிருதியைவிட பிரபலப்பிரமாணமென்ற சூக்குரலும் விலகிவிட்டது. ஏனென்றால் அவ்விரோதாதிகாண ஸித்தாந்தம் இவர்களுடைய மனோரதத்தில் உள்ளபடியல்லவென்பதும் வைதிகஸம்பிரதாயமறியாதவர்களுக்குப் புலப்படமுடியாதல்லவா ? வைதிகஸம்பிரதாயஸித்தமாயிருக்கும் அவ்வதிகரண ஸித்தாந்தாஹஸ்யமென்னவென்றால் பிரமாணபலாபலத்தைநிர்ணயிக்கும் சுருதி, லிங்கம், வாக்கியம் முதலிய ஆறுவகை பிரமாணங்களுக்குள் ஏதாவதொரே பிரமாணத்தை முன்னிட்டுக்கொண்டு சுருதியும் ஸ்மிருதியுமிரண்டும், ஒரே விஷயத்தில் பரஸ்பரவிருத்தமாயிருக்கும் இரண்டுகாரியத்தை அனுஷ்டிக்கும்படி விதிக்குமேயானால் அவ்விரண்டு காரியங்களுக்குள் சுருதிப் பிரமாணத்தால் அறிவிக்கப்படும்காரியத்தையே அனுஷ்டிக்கவேண்டுமேயொழிய துர்பலஸ்மிருதிப் பிரமாணத்தால் விதிக்கப்படும் காரியத்தை அனுஷ்டிக்கலாகாது. இப்படிப்பட்டவிடங்களில் தான் சுருதியைக்காட்டிலும் ஸ்மிருதி துர்பலமென்பது. அதாவது— யாகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்குமொரே அக்நிமாக்கினியைக்குறித்து, சுருதிப் பிரமாணமொன்றைக்கொண்டே "தொடவேண்டும்" 'வஸ்திரத்தாலதை மறைத்துச்சுற்றிவிடவேண்டும்' என்றும், பரஸ்பரவிருத்தமாயிருக்குமர்த்தத்தை அறிவிக்கும், சுருதி, ஸ்மிருதி இவ்விரண்டிற்குள் சுருதியைக்காட்டிலும் ஸ்மிருதி, துர்பலம் என்று ஒப்புக்கொள்ளவேண்டும். இங்கு ஒரே விஷயத்தைக் குறித்து சுருதி என்ற ஒரேபிரமாணத்தால் பரஸ்பரவிருத்தமாயிருக்குமிரண்டுகாரியத்தைசுருதியும்,ஸ்மிருதியும் விதிக்கின்றதல்லவா? எந்தவிடத்தில் சுருதியும், ஸ்மிருதியும், சுருதிலிங்கம் முதலிய வெவ்வேறு பிரமாணத்தை முன்னிட்டுக்கொண்டு பரஸ்பரவிருத்தமாயிருக்குமிரண்டு அர்த்தத்தை அறிவிக்குமோ, அந்தவிடத்தில் அதிகஉன்னிகர்ஷமுள்ளப் பிரமாணத்தை முன்னிட்டுக்கொண்டு அர்த்தத்தையறிவிக்கும் பிரமாணத்தைப் பிரபலப்பிரமாணமென்றும், விப்பிரகர்ஷமுள்ள பிரமாணத்தை முன்னிட்டு அர்த்தத்தை அறிவிக்கும் பிரமாணத்தை துர்பலமென்றும் வியவஸ்தைசெய்துகொள்ளவேண்டும். ஆகவே பிரகிருத விவாஹவிஷயமொன்றைக் குறித்து லிங்கப் பிரமாணத்தைக்கொண்டு ருதுவுக்குப் பிறகு விவாஹம் செய்யவேண்டுமென்று தெரிவிக்கும் சுருதிகளைக் காட்டிலும், சுருதிப்பிரமாணத்தைக்கொண்டு, ருதுவுக்கு முன்பு விவா

ஹத்தை விதிக்கும் ஸ்மிருதிகளுக்கு பிராபல்யமதிகமென்பது நிச்
சயம். சுருதிகள் லிங்கமூலமாகத்தானே ருதுவுக்குப் பிறகு
விவாஹத்தை அறிவிக்கின்றன. ஸ்மிருதிகளோ சுருதிப்பிரமாண
மூலமாகவல்லவா ருதுவுக்கு முன்பு விவாஹத்தை விதிக்கின்றன.
சுருதிப்பிரமாணத்தைக்காட்டிலும், லிங்கப் பிரமாணமானது விப்
பிரகர்ஷமுள்ளதென்றும், அதனாலேயே வெகுதுர்பலமென்றும்,
பூர்வமீமாம்ஸாஸித்தாந்தமன்றோ? ஆதலால் இவ்விவாஹ விஷயத்
தில் இவ்விரோதாதிகரண நியாயத்தைச்சிறிதும் ஸஞ்சாரம் செய்
வதற்கிடமில்லை இவ்விஷயத்தை இவ்விரோதாதிகரணத்தில், பட்ட
குமாரிலவார்த்திகத்திலும் விரிவாய்க் கூறப்பட்டுளது. அதாவது
"சுருதிஸ்மிருதி முதலிய பிரமாணங்களுக்கு ஒன்றுக்கொன்று
விரோதமோ, அல்லது பலாபலமோ, இவ்விரண்டும் அப்பிரமா
ணங்களால் அறியப்படும் விஷயங்களின் விரோதத்தாலும் பலா
பலத்தாலும் தான் ஏற்படுமேயொழிய, ஸ்வபாவமாகப்பிரமாணங்
களுக்கு விரோதமும் பலாபலமுமில்லை. ஆகவே எப்போது சுருதி
யினின்றும் வெளியாகும் அர்த்தத்திற்கும் ஸ்மிருதியினர்த்தத்தி
திற்கும் பாஸ்பரம் விரோதமிருப்பதாகப் புலப்படுமேயானால் அதன்
பலத்தை அவலம்பித்துக்கொண்டு சாஸ்திரார்த்த நிச்சயம் ஏற்
பட்டவுடன்பிரமாணங்களாயிருக்கும் சுருதிஸ்மிருதிகளின் விரோ
தமும் பலாபலமும் சிறிதும் பயன்படாது. ஆகவே லிங்கப்பிர
மாணவாயிலாகவும், சுருதிப்பிரமாணமூலமாகவும் இரண்டு அர்த்
தத்தை அறிவிக்கும் சுருதிஸ்மிருதிகளுக்குள் சுருதியைக்காட்டி
லும் ஸ்மிருதிக்குப் பிராமாண்யம் அதிகம்தான். பாஸ்பாம் வில
க்ஷணமாயிருக்கும் கக்ஷியிலிருக்கும் சுருதியும் ஸ்மிருதியும் ஒரே
அர்த்தத்தை வெவ்வேறு பிரமாணங்களால் அறிவிக்கும்பொருட்
டுப் பிரவர்த்திக்குமேயானால் அவ்விரு பிரமாணங்களுக்கு சீக்கிர
மாக அர்த்தத்தை அறிவிக்கும் பிரமாணத்தால் அர்த்தநிர்ணயம்
ஏற்பட்டுவிடுவதால், காலவிளம்பமாக அர்த்தத்தை அறிவிக்கும்
பிரமாணத்தால் அர்த்த நிர்ணயம் ஏற்படுவதில்லை. ஏனென்றால்
சுருதிப் பிரமாணத்தால் அதிசீக்கிரமாக ஒருஅர்த்தம் நிர்ண
யிக்கப்பட்டவுடன் அப்பிரமாணம் பிரபலமாக இருந்துகொண்டு
காலதாமதமாக அர்த்தத்தை அறிவிக்கும் துர்பலப் பிரமா
ணத்தை ஜயித்துவிடுகின்றது" என்று. இவ்வார்த்திக வசனங்
களால் ஸ்மார்த்த சுருதிப்ரமாணத்தைக்காட்டிலும் மந்திரலிங்கம்

மிக துர்பலம் என்று தோன்றுகிறது. ஸ்மிருதி சுருதிப் பிரமாணமூலமாக அர்த்தத்தையறிவிப்பதால் பிரபலப்ரமாணமாகும். மந்திரமோ லிங்கமூலமாக ஒரு சுருதியைக் கற்பித்துக் கொண்டபிறகு ஒரு அர்த்தத்தை அறிவிப்பதால் ஸ்மிருதியைக் காட்டிலும் மிக துர்பலமேயாகும். ஆகவே பிரபல துர்பலப் பிரமாணங்களாக இருக்கும் இச்சுருதிலிங்க ஸ்மிருதிகளுக்கு ஸமபலமுமில்லாததால் விகல்பமும் சொல்லமுடியாது. ஆகையால் விவாக விஷயத்தில் பலமுள்ளப் பிரமாணத்தை முன்னிட்டுக் கொண்டு அர்த்தத்தையறிவிக்கும் ஸ்மிருதியே பிரபலமாகும். இந்த ஸ்மிருதிகளுக்கு சுருதியோடு விரோதம் சிறிதும் இல்லையல்லவா? எப்படி ஸ்மிருதிகளுக்குப்பலமில்லாமல் போகும். ஆதலால் ஸ்மிருதியைக்காட்டிலும் மந்திரலிங்கம் பிரபலப் பிரமாணமென்று சொல்வது மீமாம்ஸாசாஸ்திரவாயிலாக பிரமாணங்களின் உருவம் பலாபலம் முதலிய விசேஷங்களை அறியாமலிருக்கும் பாலர்களுக்கு அழகேயன்றி பண்டிதர்களுக்கு அழகல்ல.

அன்றியும்— அநுஷ்டானத்திற்குறிய, திரவியம், தேவதை, இவைகளை விளக்குவது மந்திரமாகும். அத்தகைய மந்திரத்திற்கு விதிவாக்கியத்தால் ஏதாவதொரு கர்மாவில் அங்கமாக விநியோகமேற்பட்டபிறகுதான் திரவியதேவதைகளின் ஸ்வரூபத்தைப் பிரகாசிப்பிக்கும் ஸாமர்த்தியம் ஏற்படுமேயன்றி கர்மவிசேஷத்தில் விதியால் விநியோகம் ஏற்படுவதற்கும் முந்தி மந்திரங்களுக்குஒரு அர்த்தத்தையும் அறிவிக்கும் ஸாமர்த்தியமேற்படுவதில்லை. ஆனால் அந்த மந்திரங்களுக்கு, விநியோகமேற்படுவதற்கு முந்தியும் திரவிய தேவதைகளைக்காட்டிலும் வேறான யாதாமொரு அர்த்தத்தை அறிவிக்கும் ஸாமர்த்தியம் சக்திவிசேஷமூலமாக ஏற்படலாமென்றாலும், அவ்வர்த்தமானது விதியால் வெளியாகும் அர்த்தத்திற்கு விரோதமில்லாமல் இருக்கவேண்டும். லக்ஷணை முதலிய விருத்திகளை அவலம்பித்துக்கொண்டாவது விதியால் அறிவிக்கப்படும் அர்த்தத்தை அநுசரித்தேயிருக்கவேண்டும். விதிவிரோதார்த்திற்கு விரோதியாயிருக்கும் அர்த்தத்தை அறிவிக்கும் சக்தி மந்திரங்களுக்குக் கிடையாது. அரசனுடைய ஆக்ஞையைச் செய்யக் கடமைப்பட்டிருக்கும் ராஜஸேவகன், அரசனுடைய ஆக்ஞையை மீறி நடப்பதற்கு சக்தியுள்ளவனாக இருந்தாலும் அரசனுடைய

ஆக்ஞையை மீறி நடப்பது உசிதமாமோ? அப்படியே விதியினர்த்தத்தை விளக்குவதற்காக இருக்கும் மந்திரமும் விதியின் அர்த்தத்திற்கு மாறுபட்ட அர்த்தத்தை அறிவிப்பதில் சக்தியிருந்தாலும் அவ்வர்த்தத்தை அறிவிப்பது உசிதமன்று. அதாவது அக்கினிஹோத்திரப்ரகரணத்தில் கார்ஹபத்யமென்ற அக்னியைத் துதிசெய்யும் விஷயத்தில் மந்திரமொன்று விநியோகம் பண்ணப்பட்டிருக்கின்றது. அம்மந்திரம் தமது சக்திவிசேஷத்தால் இந்திரனை அறிவிக்கின்றது. இந்திரனைத் தவிர வேறு அர்த்தத்தை அறிவிப்பதில்லை. இதன் மூலமாக இம்மந்திரத்திற்கு இந்திரனைத் துதிசெய்வதில் விநியோகமென்றேற்படுகின்றது. இம்மந்திரத்திற்கு இந்திரனென்ற அர்த்தத்தை அறிவிக்கும் ஸாமர்த்தியத்தைத் தான் லிங்கமென்று சொல்வது. இம்மந்திரலிங்கவாயிலாக இம்மந்திரத்திற்கு இந்திரனைத் துதிசெய்யும் விஷயத்தில் விநியோகம் ஏற்பட்டாலும், "இந்திரபதத்துடன் கூடிய இந்த மந்திரத்தினால் கார்ஹபத்தியமென்ற அக்னியைத் துதிசெய்யவேண்டு"மென்ற விநியோகவிதியிலிருக்கும் இரண்டாவது, மூன்றாவது வேற்றுமையுள்ள கார்ஹபத்தியமென்ற பதத்தாலும், இந்திரபதத்தாலும் கார்ஹபத்தியமென்ற அக்னியைத் துதிசெய்வதில் விநியோகஞ்செய்திருப்பதால் லிங்கத்தால் புலப்படும் விநியோகம் சக்திமூலமாக ஏற்பட்டிருந்தாலும் ஸரியல்லவென்று ஒப்புக்கொள்ளவேண்டும். இந்த மந்திரத்தை விதியால் ஒரு கர்மாவில் விநியோகமேற்படுவதற்குமுன் லிங்கத்தைமட்டிலும் பிரமாணமாக அங்கீகரித்துக்கொண்டு இந்திரனுடைய ஸ்துதியில் பிரயோகித்துக்கொள்வது யுக்தமாகுமா? அல்லது விதியால் இம்மந்திரத்திற்கு கார்ஹபத்யமென்ற அக்கினியைப் பிரதிபாதனம் பண்ணுவதில் தாத்பர்யமென்றும் லிங்கத்தால் இந்திரனிடத்தில் தாத்பர்யமென்று ஸம்ஸயப்படுத்துவது வித்வான்களுக்கு அழகாகுமா? இன்றேல் முன்காலத்தில் இம்மந்திரத்தை இந்திரஸ்துதியில் விநியோகம் பண்ணிவந்தார்கள். பிறகு சில நவீனர்கள் இம்மந்திரத்தை கார்ஹபத்யமென்ற அக்கினியைத் துதிசெய்யும் விஷயத்தில் சுருதிபலத்தையவலம்பித்துக்கொண்டு விநியோகம் பண்ணிவிட்டார்களென்று பிராசீனநவீன பேதத்தைக் கல்பனைசெய்வதும் ஸரியல்ல. இப்படியெல்லாம் சுருதிகளுக்கு அர்த்தம் கூறுவது வேதார்த்தம் செய்யும் ஸம்பிரதாயமறியாமல் புத்திமாறுபட்ட

மடைந்தவர்களின் மோஹத்தாலேயே என்று உணரவேண்டும். ஆகையால் ப்ரத்யக்ஷமாயிருக்கும் விதிவாக்கியத்திற்கு விரோதமாக மந்திரலிங்கமொரு அர்த்தத்தையும் அறிவிக்கமுடியாது.

5. அன்றியும் இந்த மந்திரத்தால் இந்த கர்மாவைச்செய்ய வேண்டுமென்று எதாவதொரு பிரமாணவாயிலாக கர்மவிசேஷத்திற்கு அங்கமாக (காரணமாக) விதிக்கபிறகுதான் மந்திரங்களுக்கு அக்கர்மாவை ஸம்பந்தித்துக்கொண்டிருக்கும் அர்த்தத்தையறிவிக்கும் ஸாமர்த்தியமேற்படுமேயொழிய ஒரு கர்மாவிற்கு மங்கமாக விதிப்பதற்குமுந்தி ஒரு அர்த்தத்தையும் நிர்ணயப்படுத்தும் ஸாமர்த்தியமவைகளுக்கில்லை. இந்தக் கர்மாவை இந்த மந்திரத்தைக்கொண்டு செய்யவேண்டுமென்று நிர்ணயஞ்செய்வதற்கும் பிரமாணமொன்று அவசியம் வேண்டும். மந்திரங்களைக் கர்மவிசேஷத்திற்கு ஸாதகமாக அறிவிக்கும் பிரமாணமொன்று முதலில் விதிக்காவிட்டால் மந்திரங்களுக்கு ஒரு அர்த்தத்தையும் அறிவிக்கும் ஸாமர்த்தியமில்லை. தாங்கள் எடுத்துரைத்த மந்திரங்களுக்கு விவாஹத்தில்தான் விநியோகம். வேறொரு கர்மாக்களிலில்லை என்று எந்த பிரமாணத்தைக்கொண்டு தங்களுக்கு நிச்சயமேற்பட்டதோ தெரியவில்லை. இந்தமந்திரங்களுக்கு விஹிதத்தில் தான் விநியோகமென்பதற்கு சுருதிகளில் விதிவாக்கியமிருப்பதாகக் காண்பிக்க முடியாது. ருதுமதீ விவாஹமென்ற வேறொரு அர்த்தத்தை அறிவிக்கும் லிங்கப்ரமாணத்தைக்கொண்டே மந்திரங்களுக்கு விவாஹத்தில் விநியோகத்தையும் கற்பித்துவிடும்பக்ஷத்தில் "அன்யோன்யாச்ரய"மென்ற தோஷம்ஸம்பவித்துவிடும். (அன்யோன்யாச்ரயமென்பது இரண்டுவஸ்துக்களுக்குள்ளிருக்கும் பரஸ்பர அபேக்ஷையேயாகும். இம்மந்திரங்களில் விவாஹத்திற்கு அங்கமானவை என்று விதிப்பதற்காக இம்மந்திரங்களுக்கு லிங்கத்தின் அபேக்ஷையும், லிங்கமூலமாக இம்மந்திரங்களுக்கு விவாஹத்திற்கு அங்கமாயிருக்குந்தன்மை ஏற்பட்டபின்புதான் இம்மந்திரங்களுக்கு லிங்கபாவமும் ஏற்படுவதால், மந்திரங்களுக்கு அங்கமாயிருக்குந்தன்மை விதிக்கும் பொருட்டு லிங்கத்தின் அபேக்ஷையும், லிங்கமாக விதிப்பதன்பொருட்டு அங்கமாக இருக்கும்தன்மையின் அபேக்ஷையும் ஏற்பட்டிருப்பதால் அன்யோன்யச்ரய தோஷம் இங்கு அறியவேண்டும்) ஆகையால்

இம்மந்திரங்களுக்கு விவாஹத்தில்தான் விநியோகமென்பதற்கு ஸ்மார்த்த விதிவாக்கியத்தைத்தான் பிரமாணமாக சரண்புகவேண்டும். அங்ஙனமாயின் முதலாவதாக விநியோகத்தை அறிவிக்கும் அந்த ஸ்மார்த்தவிதியுடன் மந்திரலிங்கங்களுக்கு விரோதமேற்படுமாயின் துர்பலமாயிருக்கும்லிங்கப்ரமாணத்தைக்கொண்டுபிரபலப் பிரமாணமாகிய சுருதியைப் பாதித்துவிடமுடியாது. ஏனென்றால் ஸ்மார்த்த சுருதி என்ற ப்ரமாண மூலமாக தனது ஸ்வரூபத்தின் லாபத்தை அடைந்திருக்கும் லிங்கப்ரமாணம் தனக்குக்காரணமாயிருக்கும் சுருதியை எப்படி பாதிக்கக்கூடும். அப்படிலிங்கமானது ஸ்மார்த்த சுருதியை பாதித்துவிடும்பக்ஷத்தில் இம்மந்திரங்களுக்கு விவாஹத்தில் அங்கமாயிருக்குந்தன்மையும் பாதிக்கப்பட்டுவிடும். இம்மந்திரங்களுக்கு விவாஹாங்கபாவம் ஸித்திக்காமலிருக்குமேயானால் எவ்விஷயத்தில் என்ன அர்த்தவிசேஷத்தை மந்திரலிங்கம் அறிவிக்கமுடியும். மந்திரலிங்கத்தால் ஸ்மார்த்தசுருதியின் அர்த்தவிசேஷமாகிய வயோவிசேஷாம்சத்திற்குமட்டிலும், பாதத்தையும் அங்கமாகவிருக்குந்தன்மையை அறிவிக்கும் அம்சத்தைமட்டிலும் பாதிப்பதில்லை என்று அர்த்தஜரதீயமாகக் கூறுவது நியாயமில்லை. ஆகையால் தனக்கு ஆச்ரயமாயிருக்கும் பிரமாணத்திற்கு விருத்தமாயிருக்கும் அர்த்தத்தை மந்திரலிங்கம் ஒருபோதும் அறிவிக்கமுடியாது.

அன்றியும் இவ்விவாஹமந்திரங்களால் சொல்லப்படும் அர்த்தத்திற்கு விவாஹகாலத்தில் விவாஹம் செய்விக்கப்படும் ஸ்திரீகளிடம் ஸம்பந்தமிருப்பதாக அறிந்தபிறகுதான் இம்மந்திரலிங்கத்திற்கு ஸ்திரீவிவாஹவயதை அறிவிக்கும் ஸாமர்த்தியம் ஸம்பவிக்கும், இன்றேல் ஸம்பவிக்கமுடியாது. அக்னிக்கு வ்யாப்யமாயிருக்கும் புகையுடன் பர்வதம் கூடியிருக்கின்றது என்ற பராமர்சக்ஞானமில்லாமல் புகையென்ற காரணத்தாலேயே அக்னியை பர்வதத்திலிருப்பதாக எப்படி அனுமானம் செய்யமுடியும்? விவாஹகாலத்தில் ஸ்திரீகளிடம் மந்திரார்த்த ஸம்பந்தமில்லாதபோனல் மந்திரலிங்கத்தால் மட்டிலும்எப்படி ஸ்திரீவிவாகவயதை ஸாதிக்கமுடியும். இம்மந்திரார்த்திற்கும் விவாஹகாலத்தில் ஸ்திரீகளிடம் ஸம்பந்தமென்பதும் ஸ்மார்த்தவிதிமூலமாகத்தான் கற்பிக்கவேண்டும். ஆகவே பூர்வபக்ஷிகளாலெடுத்துக் கூறப்பட்ட மந்திரலிங்கங்களும் ஸ்மார்த்தங்களென்றுதான் ஒப்புக்கொள்ளு

வேண்டும். ஆகவே மந்திரலிங்கமும் ஸ்மார்த்தவிதியும் இரண்டும் ஸ்மார்த்தமானபடியால் பேதத்தையடைவதில்லை. இவ்விரண்டும் ஸ்மார்த்தமென்பது ஸமானமாகவே ஸித்திக்குமேயானால் விதிக்கு விருத்தமாயிருக்கும் லிங்கத்துக்கு தௌர்பல்யம் நிச்சயமன்றோ?

தவிர கர்மவிசேஷத்தில் விதிவாக்கியத்திற்கு முதலில் பிரவிருத்தியேற்பட்ட பிறகுதான் மந்திரங்களுக்கு அக்கர்மாவில் பிரவிருத்தியேற்படுவதாகச் சொல்லவேண்டும். ஆகவே முதலாவதாகப் பிரவர்த்தித்திருக்கும் விதிவாக்கியம் உபக்ரமஸ்தமா (ஆரம்பத்திலிருப்பதா)கும். இரண்டாவதாக பிரவர்த்தித்திருக்கும் மந்திரமோ உபஸம்ஹாரத்திலிருக்கிறது. ஆகவே உபக்ரமத்திலிருக்கும் பிரமாணமானது துர்பலமாயினும் அவற்றாலறிவிக்கப்படும் அர்த்தத்தை உபஸம்ஹாரத்திலிருக்கும் பிரமாணமானது மிகப்பிரபலமாயிருந்தாலும் அனுஸரித்துக்கொண்டே இருக்கவேண்டும். லக்ஷணை முதலியவற்றலாவது உபஸம்ஹாரத்திலிருக்கும் பிரமாணத்திற்கு உபக்கிரமத்திலி (ஆரம்பத்திலி) ருக்கும் பிரமாணத்தாலறியவிக்கப்படும் அர்த்தத்தை அனுசரித்தேதான் அர்த்தங் கூற வேண்டுமே ஒழிய, உபக்ரமத்தில் ஸித்தாமாயிருக்கும் பிரமாணத்தாலறியப்படும் அர்த்தத்திற்கு விபரீதமாக இருக்கக்கூடாது. அன்றியும் உபஸம்ஹாரத்திலிருக்கும் துர்பலப்பிரமாணத்தையனுசரித்து உபக்கிரம ஸித்தமாயிருக்கும் பிரமாணத்திற்கு லக்ஷணை முதலியவற்றல் அர்த்தங்கூறுவதும் சரியல்ல. உபக்ரமப்பிரமாணம் துர்பலமாயிருந்தாலும் அதையனுசரித்துத்தான் உபஸம்ஹாரத்தை ப்ரபலமாயிருந்தாலும்நயனஞ்செய்துகொள்ளவேண்டுமென்று பூர்வமீமாம்ஸகர்களின் ஸித்தாந்தம். இவ்வண்ணமே பூர்வமீமாம்ஸாசாஸ்திரத்தில் மூன்றும் அத்தியாயத்தில் 'अचोदिते च कर्मभेदात्' என்ற அதிகரணத்தில் ஜைமினிபகவான் ஸித்தாந்தம் செய்திருக்கின்றார். அதாவது "எவ்வளவு குதிரைகளை தானம் வாங்குகிறனே அவ்வளவு வருணேஷ்டிகளை நான்கு கபாலத்தில் பக்வம் செய்யப்பட்ட புரோடாச த்ரவியத்தைக்கொண்டு செய்ய வேண்டும்" என்ற பிரபலமாயிருக்கும் விதிவாக்கியத்தால் குதிரை தானம்வாங்கினவர்கள்வருணேஷ்டியைச் செய்யவேண்டுமென்று ஸ்பஷ்டமாய்ப்புலப்படுகின்றது. இவ்விதம்விதிவாக்யத்தால்குதிரை தானம் வாங்குகிறவர்களுக்கு வருணேஷ்டி செய்யவேண்டுமென்று புலப்பட்டாலும் "பிரஜாபதியானவர் வருணனுக்குக்